**காரைக்குடி நகராட்சி**
**01.06.2018 ம் தேதி நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்**
**தலைமை: திருமதி.அ.சுந்தரம்பாள் ஆணையர் மற்றும் தனிஅலுவலர்**
**மன்றப் பொருட்கள்**

<table>
<tr><th>Date of meeting of the council</th><th>S.No.</th><th>Subject in the Agenda</th><th>Decision of the council</th></tr>
<tr><td>01.06.2018</td><td>1</td><td>இந்நகராட்சி 2018–2021 ஆம் ஆண்டு ஏல குத்தகை இனங்களில் பழைய பேருந்து நிலையத்தில் பூ விற்பனை செய்யும் உரிமைக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 19.01.2018, 07.02.2018, 22.02.2018, 07.03.2018, 16.03.2018, 28.03.2018, 25.04.2018, 03.05.2018, 11.05.2018 மற்றும் 30.05.2018 ஆகிய தேதிகளில் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி ஏல தேதிகளில் ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. பழைய பேருந்து நிலையத்தில் பூ விற்பனை செய்யும் உரிமைக்கு 31.05.2018 அன்று மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><th>வ.எண்.</th><th>ஏல தேதி</th><th>இனம்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஆண்டு 1–க்கு ஏலத் தொகை ரூ</th></tr>
<tr><td>1</td><td>31.05.2018</td><td>பழைய பேருந்து நிலையத்தில் பூ விற்பனை செய்யும் உரிமை</td><td>திரு.பி.குமார்</td><td>ரூ.33336/–</td></tr>
</table>
அலுவலகக் குறிப்பு<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. இவ்வினத்திற்கு பலமுறை ஏலம் கோரியும் ஏலம் போகாததாலும் நகராட்சி நிதி இழப்பை தவிர்க்கும் பொருட்டும் திரு.பி.குமார் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.33336/–யை ஏற்று குத்தகை</td><td>தீர்மான எண். 43<br>அலுவலகக்குறிப்புகள் ஏற்கப்பட்டது.</td></tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>உரிமம் ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.6147/2017/அ1)</td><td></td></tr>
<tr><td></td><td>2</td><td>இந்நகராட்சி 2018–2021 ஆம் ஆண்டு ஏல குத்தகை இனங்களில் புதிய பேருந்து நிலையத்தில் பூ விற்பனை செய்யும் உரிமைக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 19.01.2018, 07.02.2018, 22.02.2018, 07.03.2018, 16.03.2018, 28.03.2018, 25.04.2018, 03.05.2018, 11.05.2018 மற்றும் 30.05.2018 ஆகிய தேதிகளில் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி ஏல தேதிகளில் ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. புதிய பேருந்து நிலையத்தில் பூ விற்பனை செய்யும் உரிமைக்கு 31.05.2018 அன்று மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br><table><tr><th>வ.எண்.</th><th>ஏல தேதி</th><th>இனம்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஆண்டு 1–க்கு ஏலத் தொகை ரூ</th></tr><tr><td>1</td><td>31.05.2018</td><td>புதிய மற்றும் பழைய பேருந்து நிலையத்தில் பூ விற்பனை செய்யும் உரிமை</td><td>திருமதி. மீனாள்</td><td>ரூ.70,000/–</td></tr></table><br>அலுவலகக் குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.இவ்வினத்திற்கு பலமுறை ஏலம் கோரியும் ஏலம் போகாததாலும் நகராட்சி நிதி இழப்பை தவிர்க்கும் பொருட்டும் திருமதி. மீனாள் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.70,000/–யை ஏற்று குத்தகை உரிமம் ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண். 44<br>அலுவலகக்குறிப்புகள் ஏற்கப்பட்டது.</td></tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>(ந.க.எண்.6147/2017/அ1)</td><td></td></tr>
<tr><td></td><td>3</td><td>. இந்நகராட்சி 2018–2021 ஆம் ஆண்டு ஏல குத்தகை இனங்களில் புதிய மற்றும் பழைய பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமைக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 19.01.2018, 07.02.2018, 22.02.2018, 07.03.2018, 16.03.2018, 28.03.2018, 25.04.2018, 03.05.2018, 11.05.2018, 11.05.2018 மற்றும் 30.05.2018 ஆகிய தேதிகளில் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி ஏல தேதிகளில் ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. புதிய மற்றும் பழைய பேருந்து நிலையத்தில் நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமைக்கு 31.05.2018 அன்று மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப் பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><td>வ.எண்.</td><td>ஏல தேதி</td><td>இனம்</td><td>ஒப்பந்ததாரர் பெயர்</td><td>ஆண்டு 1–க்கு ஏலத் தொகை ரூ</td></tr>
<tr><td>1</td><td>31.05.2018</td><td>புதிய மற்றும் பழைய பேருந்து நிலையத்தில் நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமை</td><td>திரு. வி.துரைமுருகன்</td><td>ரூ.5,33,000/–</td></tr>
<tr><td>2</td><td>31.05.2018</td><td>புதிய மற்றும் பழைய பேருந்து நிலையத்தில் நுழைவு</td><td>திரு.செ.கார்த்திகேயன்</td><td>ரூ.4,14,000/–</td></tr>
</table>
</td><td>தீர்மான எண். 45<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது.</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| | | கட்டணம் வசூல் செய்யும் உரிமை | | |

அலுவலகக்குறிப்பு

மேற்படி இனத்திற்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையாக திரு.வி.துரைமுருகன் என்பவர் கொடுத்துள்ள தொகை ரூ.5,33,000/—க்கு சென்ற ஆண்டு குத்தகை தொகை ரூ.738526/—யை விட குறைவாகவும் மூன்றாண்டு சராசரி தொகை ரூ.6,88,007/—யை விட குறைவாக உள்ளது. இவ்வினத்திற்கு பல முறை ஏலம் கோரியும் ஏலம் போகாததால் துறை மூலம் வசூல் செய்யப்பட்டு வருகிறது துறை மூலம் வசூல் செய்ததில் ஒரு மாதத்திற்கு சராசரியாக ரூ.92,160/—வசூல் செய்யப்பட்டுள்ளது. இவ்வினத்திற்கு ஆண்டு குத்தகையாக துறை மூலம் வசூல் செய்வதால் ஆண்டு சராசரி குத்தகை ரூ.11,21,280/—வசூல் ஆகும் இவ்வினத்திற்கு ஒரு வருடத்திற்கு வசூல் செய்வதற்கு பணியாளர் செலவின்த்திற்கு 6,26,400/— டிக்கெட் புக் செலவினமாக ரூ.10,000 ஆக மொத்தம் ரூ.636400/— செலவு ஏற்படுகிறது. மேற்படி துறைமூலம் வசூல் செய்யப்படும். மொத்த சராசரி குத்தகை தொகை 1121280/—ல் நிர்வாக செலவினங்கள் பணியாளர் செலவினம் மற்றும் இதர செலவினங்கள் பணியாளர் செலவினம் மற்றும் இதர செலவினங்களை சேர்ந்து மொத்தம் தொகையாக ரூ.4,84,880/— உரிமத் தொகையாக உள்ளது. எனவே திரு.வி.துரைமுருகன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகை 5,33,000/— யை ஏற்று குத்தகை உரிமம் ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.6147/2017/அ1)

**காரைக்குடி நகராட்சி**
**29.06.2018 ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்**
**தலைமை: திருமதி.அ.சுந்தரம்பாள் ஆணையர் மற்றும் தனிஅலுவலர்**
**மன்றப் பொருட்கள்**

<table>
<tr><th>Date of meeting of the council</th><th>S.No.</th><th>Subject in the Agenda</th><th>Decision of the council</th></tr>
<tr><td>29.06.2018</td><td>1</td><td>காரைக்குடி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் டம்பர் பிளேசர் வாகன எண். TN63 T2437 பழுது நீக்கம் செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பழுது நீக்கம் செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br><table><tr><td>1</td><td>பாலமுருகன் ஆட்டோ சர்விஸ்<br>2/256, மதுரை மெயின் ரோடு<br>கோவிலூார் ரோடு,காரைக்குடி</td><td>ரூ.129500</td></tr><tr><td>2</td><td>எஸ்.ரவி ஆட்டோ கேரேஜ்<br>139/6 வ.உ.சி ரோடு,<br>இ.பி அருகில், காரைக்குடி</td><td>ரூ.133200</td></tr></table>வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி நிறுவனமான பாலமுருகன் ஆட்டோ சர்விஸ், காரைக்குடி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.தனி அலுவலர் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.</td><td>தீர்மான எண். 46<br>அலுவலகக்குறிப்புகள் ஏற்கப்பட்டது.</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | 2 | காரைக்குடி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் பயன்பாட்டில் உள்ள 25 டிரை சைக்கிள் பழுது அடைந்து இயக்க முடியாமல் உள்ளது. அதனை டயர்கள், டியூப்கள், ரிம்கள், பின்ரிம்கள் டேரிங்கர் அடித்தகடுகள் மற்றும் அனைத்து வாகனங்களுக்கும் பால்ரஸ் மாற்றி வெல்டிங் வைத்தும், இதர பழுது நீக்கம் செய்ய ஆகும் செலவினம் ரூ.3,50,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு<br>1. அனுமதிக்கலாம்.<br>2. தனி அலுவலர் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். | தீர்மான எண். 47<br>அலுவலகக்குறிப்புகள் ஏற்கப்பட்டது. |
| | 3 | இந்நகர் வார்டு எண்.15, செக்காலை ரோட்டில் உள்ள கட்டிடம் சொத்துவரிவிதிப்பு எண்கள் 14213, 14214, 14597, 14598 உரிமையாளர் பெயர் கே.ஆர்.கிருஷ்ணன் என்பவருக்கு வரி உயர்வு செய்தது தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு எண்.WPNo.5414/2014 –ல் நகராட்சிக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கிற்கு நகராட்சி சார்பில் திரு.மகேந்திரன், வழக்கறிஞர் ஆஜராகவும், வழக்கிற்கானது செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எ.ண2271/2014/அ2) | தீர்மான எண். 48<br>அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| | 4 | இந்நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள ஆழ்குழாய் கிணறு 7—ல் 17.5 HPநீர்மூழ்கி மோட்டார் பம்ப் இயங்கவில்லை. எனவே அதனை உடன் சரிசெய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.26,426/—க்கும் மேலும் நீர்மூழ்கி மோட்டாரை டெக்கான் இன்டஸ்ட்ரிஸ் கோயம்புத்தூர் நிறுவனத்திடம் பழுது நிவர்த்தி செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>1. | தீர்மான எண். 49<br>அலுவலகக்குறிப்புகள் அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>5</td>
<td>காரைக்குடி நகராட்சியில் நடைபெற்று வரும் பாதாள சாக்கடை திட்டப் பணியினால் சேதமடைந்துள்ள சாலைகளை மேம்பாடு செய்திட தமிழ்நாடு நகர்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2018–2019ன் கீழ் கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.12981/2018/இ3 நாள் 27.06.2018ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>(ரூ. கோடியில்)
<table>
<tr><th>நகராட்சியின் பெயர்</th><th>மதிப்பீட்டுத் தொகை</th><th>தமிழ்நாடு நகர்புர சாலைகள் மேம்பாட்டு திட்ட மான்ய நிதி</th><th>மாநில நிதிக்குழு/ மத்திய நிதிக்குழு மான்ய நிதி</th><th>மாநில நிதிக்குழு மான்ய ஊக்க நிதி</th><th>நகராட்சி பங்களிப்பு</th></tr>
<tr><td>காரைக்குடி</td><td>10.00</td><td>3.80</td><td>3.00</td><td>2.20</td><td>1.00</td></tr>
</table>
மேற்கண்ட நிதி ஒதுக்கீட்டின்படி, TURIF - 2018-2019ன் கீழ் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் முடிவுற்ற 15.314 கி.மீ நீளமுள்ள சாலைகளை (இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் கண்டுள்ளவாறு) மேம்பாடு செய்து தார்த்தளம் அமைத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>மன்றம் அனுமதிக்கலாம். நகராட்சி பங்களிப்பு தொகை ரூ.100.00 இலட்சத்தை பொதுநிதியின் கீழ் செலுத்திட மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண். 50<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>6</td>
<td>காரைக்குடி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் 154 துப்புரவு பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். இவர்களின் ஆண்கள் –89, பெண்கள் –65 பேர் ஆவார்கள். இவர்களுக்கு 2018–2019–ம் ஆண்டிற்கு சீருடைகள், காலணிகள் , சோப்புகள் வாங்கி விநியோகிக்க வேண்டும். மேலும் சீருடைகள் தைப்பதற்கு தையற்கூலி வழங்க வேண்டும். மேலும் பொது சுகாதாரப் பணி மேற்பார்வையாளர்கள், அனைத்துப்பிரிவு ஓட்டுநர்கள், கிளீனர்கள், அலுலவக உதவியாளர்கள், குழாய் திறப்பாளர்கள், குழாய் சுத்திகரிப்பாளர்கள் போன்றவர்களுக்கு இரண்டாண்டிற்கு ஒருமுறை சீருடைகள் வழங்க வேண்டும். அவர்களுக்கு 2016–2017ம் ஆண்டிற்கு சீருடைகள் வழங்கப்பட்டது. 2017–2018ம் ஆண்டிற்கு வழங்கப்படவில்லை. ஆகவே 2018–2019ம் ஆண்டான இந்த ஆண்டிற்கு வாங்கி வழங்கப்பட வேண்டும். மேற்கண்டவாறு சீருடைகள், காலணிகள், சோப்புகள் வாங்கி</td>
<td>தீர்மான எண். 51<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | விநியோகிக்கவும், சீருடைகள் தைப்பதற்கு தையற்கூலி வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.9,00,000/– ஒன்பது இலட்சம் வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.3291–2016–எச்2) | |
| | 7 | தலைமை நீரேற்று நிலையத்தில் ஆழ்குழாய் கிணறு 5–ல் உள்ள 15HP நீர்மூழ்கி மோட்டார் பம்ப் இயங்கவில்லை. எனவே குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி உடன் பழுது நீக்கம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.23,500/–க்கும் மேலும் நீர்மூழ்கி மோட்டாரை டெக்கான் இன்டஸ்ட்ரிஸ் கோயம்புத்தூர் நிறுவனத்திடம் பழுது நிவர்த்தி செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம். | தீர்மான எண். 52<br>அலுவலகக்குறிப்புகள் ஏற்கப்பட்டது. |
| | 8 | காரைக்குடி நகராட்சி அதலைக் கண்மாய் ஆழ்குழாய் கிணறு அருகில் மோட்டார் அறை அமைத்தல் பணிக்கு ரூ.1.90 இலட்சத்திற்கு மன்ற ஒப்புதல் பெற்று (நகர்மன்றத் தீர்மான எண்.193 நாள் 31.08.2017) ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்தவருக்கு பணி உத்தரவு வழங்கி பணி முடிக்கப்பட்டது. மதிப்பீடு தயார் செய்யும் போது GST 12% சம்பந்தமாக அரசு ஆணை வரவில்லை. அதனால் மேற்கண்ட மதிப்பீட்டில் GST 12% வழிவகை செய்யப்படவில்லை. மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி முடிந்த பிறகுதான் GST 12% சம்பந்தமாக தரப்படுத்தப்பட்ட விலைவிகித அட்டவணை வரப்பெற்றுள்ளன. எனவே, வேலையின் மதிப்புடன் GST சேர்த்து செலவினம் ரூ.211574/– ஏற்படுகிறது. எனவே, கூடுதல் செலவினத் தொகை ரூ.21574/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு<br>1. குடிநீர் நிதியின் கீழ் அனுமதிக்கலாம்.<br>காரைக்குடி நகராட்சி கலவை உரக்கிடங்கிலிருந்து அரியலூர் சிமெண்ட் ஆலைக்கு மட்காத | தீர்மான எண். 53<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td>9</td>
<td>திடக்கழிவுகள் டாரஸ் லாரி மூலம் கொண்டு செல்ல கீழ்க்கண்ட இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>வ.எண்.</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>வாடகை (ஒரு முறைக்கு)</th></tr>
<tr><td>1</td><td>Thoolmati Trust<br>No.225 CMC Road<br>Devakottai Rastha<br>Karaikudi</td><td>ரூ.8700/–</td></tr>
<tr><td>2</td><td>Collective Organization<br>for Rural Educational Trust<br>12 Bajanai Kovil street market<br>Narayanapuram<br>Jolarpet 635 851</td><td>ரூ.8900/–</td></tr>
</table>
மேற்கண்ட விலைப்புள்ளி குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள தூய்மை டிரஸ்டி, காரைக்குடி நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>
அலுவலகக் குறிப்பு<br>
1. அனுமதிக்கலாம்.<br>
2.தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.</td>
<td>தீர்மான எண். 54<br>அலுவலகக்குறிப்புகள் ஏற்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td></td>
<td>10</td>
<td>காரைக்குடி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவு பணியாளர்கள் துப்புரவு பணியாற்ற தளவாடச் சாமான்கள் வாங்கிட நகர்மன்ற தீர்மான எண்.387 நாள் 28.02.2018–ல் ரூ.5,00,000/–க்கு மன்ற அனுமதி அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் அதில் 300 தென்னை மாறுக்கு பதில் இரும்பு கூட்டுமாறு 300 வாங்கப்பட்டதாலும் கூடுதல் உபகரணங்கள் வாங்கப்பட்டதால் ஏற்பட்ட கூடுதல் செலவினம் ரூ.322720/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக் குறிப்பு<br>
1. அனுமதிக்கலாம்.<br>
2. மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண். 55<br>அலுவலகக்குறிப்புகள் அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | 11 | இந்நகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வரும் ஈப்பு வாகனம் எண். TN63 AV 5823 ஒரு லிட்டர் கிலோ மீட்டர் தூரம் கடந்து விட்டதால் வாகனத்திற்கு ஆயில் சர்வீஸ் மற்றும் இதர பழுதுகள் நிவர்த்தி செய்யும் பணிக்கு ஆகும் உத்தேச லெவினம் ரூ.50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு<br>பொது நிதியின் கீழ் மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண். 56<br>அலுவலகக்குறிப்பு<br>ஏற்கப்பட்டது. |
| | 12 | இந்நகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வரும் ஈப்பு வாகன எண். TN63 AV 5823 ஒரு இலட்சம் கிலோ மீட்டர் தூரம் கடந்து விட்டதால் வாகனத்தின் நான்கு டயர்களும் தேய்மானம் ஆகிவிட்டது. நான்கு டயர்களையும் புதியதாக மாற்றம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.31,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு<br>பொது நிதியின் கீழ் மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண். 57<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |
| | 13 | இந்நகராட்சி ஒப்பந்ததாரர்கள், பணியாளர்கள், குத்தகைதாரர்களிடம் பிடித்தம் செய்யும் வருமானவரியினை உரிய தலைப்பில் செலுத்தி காலாண்டுக்கு ஒருமுறை E- Filling செய்ய வேண்டியுள்ளது. இப்பணியினை எட்டு ஆண்டுகளாக செவ்வனே செய்து வரும் திரு.டி.பரத்வாஜ், பட்டயக் கணக்கர் வசம் 2018–2019ம் நிதியாண்டிற்கு ஒப்படைக்கவும் அதற்குரிய கட்டணமாக காலாண்டிற்கு ரூ.3000/– வீதம் ஒப்பந்ததாரர்களுக்கு ஆண்டுக்கு ரூ.12000/– பணியாளர்களுக்கு ரூ.12000/– குத்தகைதாரர்களுக்கு ரூ.12000/– என வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>இதே போல் GST -க்கு மாதாமாதம் Filling செய்ய வேண்டியுள்ளதால் அதற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1500/– வீதம் ஆண்டுக்கு ரூ.18000/– வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு<br>திரு.டி.பரத்வாஜ், பட்டயக் கணக்கரிடம் மேற்படி பணியை ஒப்படைக்கவும், அதற்குரிய செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண். 58<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 14 | காரைக்குடி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் காம்பாக்டர் வாகன எண்.TN63T7828-ல் கிளட்சி பிளேட் பழுது அடைந்தமையால் பழுது நீக்கம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.28000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. தனி அலுவலர், காரைக்குடி நகராட்சி அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண். 59<br>அலுவலகக்குறிப்பு<br>ஏற்கப்பட்டது |
| | 15 | காரைக்குடி நகராட்சி பொது சுகாதாரம் பிரிவில் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே ஏற்கனவே கொசு தடுப்பு பணியாளர்களை மதுரை மீனாட்சி சாலிட் வேஸ்ட் நிறுவனத்தின் மூலம் 30.06.2018 வரை வெளிகொணர்வு முறையில் பணியாளர்களை சப்ளை செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் தொடர்ந்து மழை பெற்ற வாய்ப்பு இருப்பதால் ஒடிஎஸ் வகை கொசு உற்பத்தி அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. எனவே 50 வீடுகளுக்கு ஒரு DCB பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டும் என நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்கள் அறிவுறுத்தியதின் பேரிலும் மாதம் ஒன்றுக்கு 60 நபர்களை ஜீலை2018 முதல் செப்டம்பர்2018 வரை ஏற்கனவே நகர்மன்ற தீர்மான எண்.156 நாள் 31.07.2017—ல் அனுமதித்த அதே விலை விகிதத்தில் வழங்க மதுரை மீனாட்சி சாலிட் வேஸ்ட்நிறுவனம் காரைக்குடிக்கு பணி உத்தரவு வழங்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.12,15,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. தனி அலுவலர், காரைக்குடி நகராட்சி அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண். 60<br>அலுவலகக்குறிப்பு<br>ஏற்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>16</td>
<td>. காரைக்குடி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு காம்பேக்டர் வாகன எண். TN63AT 7828-ல் உள்ள கிளச் பிளேட் பழுது மற்றும் இதர பழுதுகளை பழுது பார்க்க கீழ்க்கண்ட விலைப்புள்ளிகள் பெறப்பட்டன.<br>
<table>
<tr><td>1</td><td>திரு.ஆர்.ரமேஷ்குமார்<br>ஸ்ரீகல்கி சர்வேஸ்வரன் ஆட்டோ மோட்டிவ் ஒர்க்ஷாப் 27டி நடராஜபுரம் முதல் தெரு, தேவகோட்டை 630 302</td><td>ரூ.27540</td></tr>
<tr><td>2</td><td>திரு.எம்.சுனில்குமார்<br>ராயல் ஆட்டோ மொபல்ஸ், எஸ்.பிகாம்பிளக்ஸ்<br>14 வயிரவன் அம்பலம் தெரு, காரைக்குடி 630 001.</td><td>ரூ.29000</td></tr>
<tr><td>3</td><td>திரு.கே. ஆட்டோகேர்<br>179, ராமேஷ்வரம் மெயின் ரோடு,தேவகோட்டை 630 302</td><td>ரூ.31060</td></tr>
</table>
எனவே மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s ஆர்.ரமேஷ்குமார் ஸ்ரீகல்கி சர்வேஸ்வரன் ஆட்டோ மோட்டிவ் ஒர்க்ஷாப் தேவகோட்டை நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.<br>
அலுவலக குறிப்பு<br>
1. அனுமதிக்கலாம்.<br>
2 தனி அலுவலர், காரைக்குடி நகராட்சி அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண். 61<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>17</td>
<td>காரைக்குடி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் TN. 63 9666 தகுதி சான்று பெறுவதற்கு வாகனத்தை பழுது நீக்கம் செய்ய அரசு அங்கீகாரம் பெற்ற டி.வி. சுந்தரம் அய்யங்கார் சன்ஸ் லிமிடெட் புதுக்கோட்டை மூலம் பழுது பணி மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.115000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக் குறிப்பு<br>
1. அனுமதிக்கலாம்.<br>
2. தனி அலுவலர், அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண். 62<br>அலுவலகக்குறிப்புகள் அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>18</td>
<td>காரைக்குடி நகராட்சி வார்டு எண்.14 மேல வாய்க்கால் தெருவில் வேம்பு மரம் ஒன்று கிளைகள் ஏதுமின்றி பட்டுப்போய் ஆபத்தான நிலையில் உள்ளது. (புகைப்படம் இணைக்கப்பட்டுள்ளது) அதனை பொது ஏலம் விட்டு அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு<br>1.மன்றம் அனுமதிக்கலாம்</td>
<td>தீர்மான எண். 63<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>19</td>
<td>இந்நகராட்சி குடிநீர் நிதி – 2018–19 ன் கீழ் ரூ. 2.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.8 செக்காலை ரோடு, வார்டு எண்.19, வள்ளலார் குறுக்கு தெரு மற்றும் வார்டு எண்.22, வ.உ.சி பிரதான சாலை போன்ற தெருக்களுக்கு குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல் பணிக்கு 31.05.18–ல் நகர்மன்றம் அனுமதி அளித்ததின் பேரில் 26.06.18– அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.
<table>
<tr><th>வ.எண்.</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு. T.முருகன், காரைக்குடி.</td><td>மதிப்பீட்டைவிட 0. 63 % குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு ,R.V.K. வெங்கடாசலபதி, காரைக்குடி.</td><td>மதிப்பீட்டைவிட 13.20% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. T.முருகன், காரைக்குடி. அவர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட 0. 63 % குறைவாக உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு :<br>அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண். 64<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>20</td>
<td>இந்நகராட்சி வருவாய் நிதி 2018–19 ன் கீழ் ரூ. 2.50 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சி சாத்தப்பன் பூங்கா வளாகத்தில் நுண் துகள் உரம் தயாரிக்கும் பணிக்கு கூடாரம் அமைக்கும் பணிக்கு 28.03.18 –ல் நகர்மன்றம் அனுமதி அளித்ததின் பேரில் 26.06.18 –அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.
<table>
<tr><th>வ.எண்.</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>M/S மல்லிகா அன் கோ , காரைக்குடி.</td><td>மதிப்பீட்டைவிட 0.12 % குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு , R.V.K. வெங்கடாசலபதி, காரைக்குடி.</td><td>மதிப்பீட்டைவிட 1. 40 % அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் M/S மல்லிகா அன் கோ காரைக்குடி. அவர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.12 % குறைவாக உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>
அலுவலகக்குறிப்பு:<br>
அ) அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண். 65<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>21</td>
<td>இந்நகராட்சி வருவாய் நிதி 2018–19 ன் கீழ் ரூ. 2.50 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.22 சிவானந்த மகால் சந்து பகுதியில் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு 28.02.18 –ல் நகர்மன்றம் அனுமதி அளித்ததின் பேரில் 26.06.18 –அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.
<table>
<tr><th>வ.எண்.</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.டி.செந்தில்குமார் , காரைக்குடி</td><td>மதிப்பீட்டைவிட 0.05 % குறைவு</td></tr>
</table></td>
<td>தீர்மான எண். 66<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>2</td><td>திரு .கே.சுந்தரபாண்டியன், காரைக்குடி.</td><td>மதிப்பீட்டைவிட 3. 53 % அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.டி.செந்தில்குமார், காரைக்குடி. அவர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.05 % குறைவாக உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு:<br>
அ) அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>22</td>
<td>
இந்நகராட்சி வருவாய் நிதி 2018–19 ன் கீழ் ரூ. 2.80 இலட்சம் மதிப்பீட்டில வார்டு எண்.31, கணேசபுரம் பகுதியில் உள்ள நாடகமேடை மராமத்து பணி செய்தல் பணிக்கு 28.02.18–ல் நகர்மன்றம் அனுமதி அளித்ததின் பேரில் 26.06.18–அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.
<table>
<tr><th>வ.எண்.</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு. D.செந்தில்குமார், காரைக்குடி.</td><td>மதிப்பீட்டைவிட 0.12 % குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு. K. சுந்தரபாண்டியன், காரைக்குடி.</td><td>மதிப்பீட்டைவிட 2.71 % அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. D.செந்தில்குமார், காரைக்குடி அவர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.12 % குறைவாக உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
</td>
<td>தீர்மான எண். 67<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td>23</td><td>இந்நகராட்சி கல்வி நிதி 2018–19 ன் கீழ் ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சி முத்தூரணி தொடக்கப்பள்ளிக்கு தண்ணீர் வசதி செய்தல் பணிக்கு 28.03.2018–ல் நகர்மன்றம் அனுமதி அளித்ததின் பேரில் 26.06.2018 – அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.<br><br>
<table>
<tr><td>வ.எண்.</td><td>ஒப்பந்ததாரர் பெயர்</td><td>ஒப்பந்த சதவீதம்</td></tr>
<tr><td>1</td><td>திரு. M. முகமதுஅப்துல்லா , காரைக்குடி.</td><td>மதிப்பீட்டைவிட 0.13 % குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு. P..விவேகானந்தன, காரைக்குடி.</td><td>மதிப்பீட்டைவிட 1.10 % அதிகம்</td></tr>
</table>
<br>மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. M. முகமதுஅப்துல்லா , காரைக்குடி.அவர்கள் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.13 % குறைவாக உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு :<br>அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண். 68<br>அலுவலகக்குறிப்பு<br>ஏற்கப்பட்டது.</td></tr>
<tr><td></td><td>24</td><td>இந்நகராட்சி குடிநீர் நிதி – 2017–18 ன் கீழ் ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சி திருச்சி சாலை OHT, சுப்பிரமணியபுரம் OHT, செஞ்சை OHT மற்றும் சூடாமணிபுரம் OHT வளாகத்தில் உள்ள காவலர் அறைக்கு மின்வசதி செய்தல் பணிக்கு 31.05.18–ல் நகர்மன்றம் அனுமதி அளித்ததின் பேரில் 26.06.18– அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல்</td><td>தீர்மான எண். 69<br>அலுவலகக்குறிப்பு<br>ஏற்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>25</td><td>இந்நகராட்சி குடிநீர் நிதி – 2018–19 ன் கீழ் ரூ. 0.50 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.13, சோமுபிள்ளை தெருவில் உள்ள ஆழ்குழாய் கிணற்றில் புதிய மின்மோட்டார் பொருத்தி தண்ணீர் வசதி செய்தல் பணிக்கு 31.05.18–ல் நகர்மன்றம் அனுமதி அளித்ததின் பேரில் 26.06.18– அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.<br><br>
<table>
<tr><td>வ.எண்.</td><td>ஒப்பந்ததாரர் பெயர்</td><td>ஒப்பந்த சதவீதம்</td></tr>
</table></td><td>தீர்மான எண். 70<br>அலுவலகக்குறிப்பு<br>ஏற்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>
<table>
<tr><td>1</td><td>திரு. D.செந்தில்குமார், காரைக்குடி.</td><td>மதிப்பீட்டைவிட 0.15 % குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு. K. சுந்தரபாண்டியன், காரைக்குடி.</td><td>மதிப்பீட்டைவிட 1.45 % அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. D.செந்தில்குமார், காரைக்குடி அவர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட 0.15 % குறைவாக உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு :<br>
அனுமதிக்கலாம்.
</td><td></td></tr>
<tr><td></td><td>26</td><td>இந்நகராட்சி வார்டு எண்.28 ஆலங்குடியார் வீதியில், ஆலங்குடியார் நகராட்சி நடுநிலைப் பள்ளி முகப்பின் மேல்புறம் உள்ள ஓட்டுக்கூரை கொண்ட குடியிருப்பு கட்டிடம் நகராட்சி துப்புரவுப் பணியாளருக்கு வழங்கப்பட்டிருந்தது. மேற்படி துப்புரவு பணியாளர் ஓய்வு பெற்று சென்றுவிட்டதால் நீண்ட நாட்களாக மேற்படி கட்டிடம் பழுதடைந்து பயன்பாடு இல்லாமல் உள்ள. எனவே, மேற்படி ஓட்டுக்கூரை கட்டிடத்தை பொது ஏலம் விட்டு அப்புறப்படுத்தி விட்டு, அந்த இடத்தினை அருகிலுள்ள ஆலங்குடியார் நகராட்சி நடுநிலைப் பள்ளி வளாகத்துடன் இணைத்துவிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண். 71<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>27</td><td>இந்நகராட்சி குடிநீர் விநியோகம் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள ஆழ்குழாய் கிணறு மற்றும் நகரில் பல்வேறு இடங்களில் இயங்கும் ஆழ்குழாய் கிணறுகளுக்கு உரிய Fully Atomatic Star Detta stater 25 HP, 20 HP stater- கள் பழுதடைந்துள்ளது. எனவே மேற்கண்ட இடங்களில் உள்ள stater- , பழுதடைந்தால் உடனடியாக மாற்றுவதற்கு stater–கள் இருப்பில் இல்லை. ஆகவே பழுதடைந்துள்ள 25 HP stater-கள் 2 nos, 20HP- 4 Nos stater-கள் பழுது நீக்கம் செய்வதற்கு கூலி உள்பட ஆகும் உத்தேச செலவினம் ரூ.26100/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக் குறிப்பு :<br>
1.குடிநீர் நிதியின் கீழ் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2.தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.</td><td>தீர்மான எண். 72<br>அலுவலகக்குறிப்புகள்<br>ஏற்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | | |

தனி அலுவலர்
காரைக்குடி நகராட்சி